TNKR080003042023

**சார்பு நீதிமன்றம், குளித்தலை,**

**முன்னிலை : திரு.ஈ.முத்துசாமி, பி.ஏ. பி.எல்.,**
**சார்பு நீதிபதி, குளித்தலை**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11–ம் தேதி புதன்கிழமை**

**அசல் வழக்கு எண்.124/2023**

**CNR No.TNKR08-000304-2023**

கனரா வங்கி, குளித்தலை கிளை,
அதன் கிளை மேலாளர் மூலமாக ... வாதி

**/எதிர்/**

1. A.சரிகா
2. K.அன்பழகன் ... பிரதிவாதிகள்

**தீர்ப்புரை**

வாதியின் வங்கியிடமிருந்து பிரதிவாதிகள் பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.2,99,521/–ஐ 10.95% பின்வட்டியுடன் செலுத்த உத்தரவிடக் கோரி வாதியால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 13.03.2023 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 10.03.2026 |
| தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | : | 11.03.2026 |
| வாதிக்காக | : | திரு.K.ஷேக் அன்வர்தீன் – வழக்கறிஞர் |
| பிரதிவாதிகளுக்காக | : | திருமதி.M.புவனேஸ்வரி – வழக்கறிஞர் |

**1) பிராதின் சுருக்கம் :–**

இவ்வழக்கின் வாதியின் வங்கியிடம், முதல் பிரதிவாதியின் படிப்பு செலவிற்காக பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து கடந்த 18.10.2013–ம் தேதி அன்று கடன் கேட்க, மேற்படி கடன் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்த வாதியின் வங்கியானது

பிரதிவாதிகளுக்கு அன்றைய தினமே ரூ.2,05,683/−ஐ கடனாக கொடுக்க, மேற்படி கடன் தொகைக்கு பிரதிவாதிகள் ஆவணங்களில் கையொப்பம் செய்து கொடுத்து, பணத்தை பெற்றுக்கொண்டதற்கு பின்னிட்டு, வாதியின் வங்கியிடம் பிரதிவாதிகள் பெற்ற கடன் தொகையினையோ, வட்டியையோ செலுத்தாமல் காலம் தாழ்த்தி வந்துள்ளார்கள். எனவே, வாதியின் வங்கியிடமிருந்து பிரதிவாதிகள் பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.2,99,521/−ஐ 10.95% பின்வட்டியுடன் செலுத்த உத்தரவிடக் கோரி வாதியால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :−**

வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல. பிரதிவாதிகளால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. வாதி வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை அவரே நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர். தாவா தொகையான ரூ.2,99,521/−ஐ வட்டியுடன் சேர்த்து வழக்கு தாக்கல் செய்திருப்பது தவறானது. வழக்கில் குறிப்பிட்டுள்ள கணக்கீடு தவறானது. கல்விக் கடனுக்கான அரசாங்கத் திட்டமான மான்யம் தொகையை வாதி கழிக்கவில்லை. கல்விக் கடனிற்கான நடைமுறைகளைப் பின்பற்றாமல் தவறான முறையில் கணக்கிடப்பட்டது. வாதியின் வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை. பிரதிவாதிகளுக்கு முறையாக அறிவிப்பு வாதியால் அனுப்பப்படவில்லை. வாதியின் வழக்கானது காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, வாதியின் வழக்கினை பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளார்கள்.

**3) வழக்குரை, எதிர்வழக்குரை வழக்கு கோப்பில் உள்ள சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றம் பின்வரும் எழுவினாக்களை வனைந்திருந்தது.**

**1** Whether the plaintiff is entitled Judgment and Decree as prayed for?

**2** To what other reliefs?

4) வாதி தரப்பில், வாதி வங்கியின் கிளை மேலாளர் விக்னேஷ் என்பவர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5) வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், வாதி அவருடைய வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபித்துள்ளதால், வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

6) பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், வாதி அவருடைய வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபணம் செய்யவில்லை என்பதால், வாதியின் வழக்கை பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

7) **எழுவினா ஒன்றிற்கான தீர்வு :-**

*(1) Whether the plaintiff is entitled Judgment and Decree as prayed for?*

**7 (1)** வா.சா.1 அவரது முதல் விசாரணையில், இவ்வழக்கின் வாதியின் வங்கியிடம், முதல் பிரதிவாதியின் படிப்பு செலவிற்காக பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து கடந்த 18.10.2013-ம் தேதி அன்று கடன் கேட்க, மேற்படி கடன் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்த வாதியின் வங்கியானது பிரதிவாதிகளுக்கு அன்றைய தினமே ரூ.2,05,683/-ஐ கடனாக கொடுக்க, மேற்படி கடன் தொகைக்கு பிரதிவாதிகளால் ஆவணங்களில் கையொப்பம் செய்து கொடுத்து, பணத்தை பெற்றுக்கொண்டதற்கு பின்னிட்டு, வாதியின் வங்கியிடம் பிரதிவாதிகள் பெற்ற கடன் தொகையினையோ, வட்டியையோ செலுத்தாமல் காலம் தாழ்த்தி வந்துள்ளார்கள் என்றும், எனவே, வாதியின் வங்கியிடமிருந்து பிரதிவாதிகள் பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.2,99,521/-ஐ 10.95% பின்வட்டியுடன் செலுத்த உத்தரவிடக் கோரி வாதியால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

**7 (2)** பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், தாவா தொகையை வட்டியுடன் சேர்த்து கணக்கீடு செய்து தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது தவறு என்றும்,

கல்விக் கடனுக்கான அரசாங்கத் திட்டமான மான்யத் தொகையை வாதி வங்கி கழிக்கவில்லை என்றும், கல்விக் கடனிற்கான நடைமுறைகளைப் பின்பற்றாமல் தவறான முறையில் கணக்கிடப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்கள். ஆனால், மேற்படி சங்கதிகளுக்கு ஆதரவாக ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதிகள் அவர்களை சாட்சிகளாக விசாரணை செய்து, அவர்களுடைய எதிர்வாதத்தை நிரூபணம் செய்ய முன்வராதது, அவர்களுக்கு எதிரான அனுமானத்தை உருவாக்குகிறது. எதிர்வழக்குரையில் ஒரு சங்கதியை தெரிவித்தாலேயே அதனை சாட்சியமாக கருதிக்கொள்ள இயலாது. எனவே, வா.சா.1–ன் வாய்மொழி சாட்சியத்தின் வாயிலாகவும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்களின் வாயிலாகவும் பிரதிவாதிகள் கடன் பெற்றுள்ளார்கள் என்கின்ற சங்கதியையும், மேற்படி கடன் தொகைக்காக ஆவணம் பிறப்பித்துக்கொடுத்துள்ளார்கள் என்கின்ற சங்கதியையும் வாதி தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபணம் செய்துள்ளார். இவ்வாறாக, எழுவினா ஒன்றிற்கு விடை காணப்படுகிறது.

**8) எழுவினா இரண்டிற்கான தீர்வு :–**

*(2) To what other reliefs?*

முதல் எழுவினா வாதிக்கு ஆதரவாக முடிவு செய்யப்பட்டுள்ளதாலும், இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும் வழக்கின் செலவு தொகையினை வாதி பெறுவதற்கு வாதிக்கு உரிமையுண்டு. இவ்வாறாக, எழுவினா இரண்டிற்கு தீர்வு காணப்படுகிறது.

**9) முடிவாக,**

**(அ)** வாதியின் வழக்கானது செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

**(ஆ)** பிரதிவாதியானவர்கள் வாதிக்கு செலுத்த வேண்டிய தாவா தொகை ரூ.2,99,521/–ம் மற்றும் அசல் கடன் தொகை ரூ.2,05,683/–க்கு தாவா தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வருட வட்டியும், தீர்ப்பு தேதி முதல் தொகை வசூலாகும் காலம் வரையிலான காலத்திற்கு 6% வருட வட்டியும் சேர்த்து இரண்டு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 11–ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.11 16:34:54 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.

**வாதி தரப்பு சாட்சி :–**

வா.சா.1 – விக்னேஷ் (வாதி வங்கியின் கிளை மேலாளர்)

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 18.10.2013 | கல்வி கடன் விண்ணப்பம் |
| வா.சா.ஆ.2 | 18.10.2013 | Sanction Memorandum |
| வா.சா.ஆ.3 | 18.10.2013 | அடமான அக்ரிமெண்ட் |
| வா.சா.ஆ.4 | 18.10.2013 | Agreement |
| வா.சா.ஆ.5 | 27.08.2013 | Bonafide Certificate |
| வா.சா.ஆ.6 | 25.09.2013 | Affidavit |
| வா.சா.ஆ.7 | 18.10.2013 | உறுதிமொழி கடிதம் |
| வா.சா.ஆ.8 | 22.06.2015 | Letter to be obtained from the student on attaining Majority |
| வா.சா.ஆ.9 | 01.07.2016 | கடன் ஒப்புகை கடிதம் |
| வா.சா.ஆ.10 | 15.06.2019 | கடன் ஒப்புகை கடிதம் |
| வா.சா.ஆ.11 | 15.09.2020 | கடன் ஒப்புகை கடிதம் |
| வா.சா.ஆ.12 | 28.12.2022 | கடன் கணக்கு பட்டியல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :–**இல்லை

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :–** இல்லை

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.11 16:34:58 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.